அனைத்து உரிமைகளும் பெற்றது

Wondershare PDFelement

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு - ஏப்ரல் 2022

## அழகுக்கலை நிபுணர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.
- 1 தொடக்கம் 50 வரையான வினாக்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள (a), (b), (c), (d) ஆகிய விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தேர்வு செய்க.
- வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உங்களால் தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு வினாக்களுக்குமான விடைகளுக்குரிய இலக்கத்தில் (x) என்ற அடையாளத்தினை இடுக.
- இவ் வினாத்தாள் 09 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

## பகுதி 1

1. கட்புருவத்தின் வளைவினை சரிசெய்யும் போது மயிர் பிடுங்கப்பட்ட (tweezed) பகுதியில் கிருமி நாசினிகளை பிரயோகிப்பதற்கான காரணம் யாது?
   a) துளைகளைத் திறப்பதற்கு
   b) வலியை நீக்குவதற்கு
   c) நுண்ணங்கித் தொற்றினைத் தவிர்ப்பதற்கு
   d) இறந்த தோற் கலங்களை அகற்றுவதற்கு

2. கை நக பராமரிப்பு தொடர்பாக உலர்ந்த புறத்தோல் மற்றும் உடையக்கூடிய நகங்கள் ஆகியவற்றின் பொருட்டு சிபார்சு செய்யப்படுவது?
   a) எண்ணை
   b) இயந்திரம்;
   c) வழமையான
   d) கிருமி நாசினி

3. நரம்புகள் மற்றும் குருதிக்கலங்கள் காணப்படுவது நகத்தின் எந்தப் பகுதியிலாகும்?
   a) படுக்கை
   b) தட்டு
   c) லினுலா (Lunula)
   d) புறத்தோல் (Cuticle)

4. வாடிக்கையாளர் ஒருவரின் நகமானது பின்வரும் எந்த நிலைமையில் காணப்பட்டால் அவரை மருத்துவரிடத்தில் சிபார்சு செய்தல் வேண்டும்?
   a) நீலநகங்கள் (Blue nails)
   b) வெண்ணிற புள்ளிகள் (White spots)
   c) ஒனிக்கோபகி (Onychophagy)
   d) ஒனிக்கோமைகோசிஸ் (Onychomycosis)

Wondershare
PDFelement

5. கெராற்றினின் தொழிற்பாடு யாது?
    a) தோலினை காயங்களில் இருந்து பாதுகாத்தல்
    b) தொடுப்பிழையத்திற்கு போசணையினை வழங்குதல்
    c) நகத்திற்கு மீள்தன்மையினை வழங்குதல்
    d) தோலின் அனைத்து வகையான வெளிப்புற இழையங்களினதும் அடிப்படையினை உருவாக்குதல்

6. அனேகமான நுண்ணங்கிகளைக் கொல்லும் இரண்டாம் மட்ட நோய்த் தொற்றுக் கட்டுப்பாடாவது,
    a) சுத்தம் செய்தல் (Sanitation)
    b) கிருமி நீக்கம் (Sterilization)
    c) தொற்று அகற்றல் (Decontamination)
    d) தொற்றுநீக்கல் (Disinfection)

7. நகத்தின் அடியில் காணப்படும் வெண்ணிற அரைப் பிறை வடிவமானது,
    a) நகச்சுற்று (Paronychia)
    b) சுயாதீன முடிவிடம் (Free edge)
    c) லினியூலர் (Lunular)
    d) ஹைப்போனிச்சியல் (Hyponychial)

8. நீங்கள் கை நகப் பராமரிப்பு ஒன்றினை முடித்த பின்னர் கீழே தரப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டியது? பஞ்சு, எமரி போட் (emery boards) மற்றும் ஒரேஞ் வூட் ஸ்ரிக் (orange wood stick)
    a) இந்த துளையற்ற பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்
    b) இந்த துளையற்ற பொருட்களை அகற்றுதல்
    c) இந்த துளையுள்ள பொருட்களை அகற்றுதல்
    d) இந்தப் பொருட்களை தொற்றுநீக்குதல்

Wondershare
PDFelement

9. ஒரு வாடிக்கையாளருக்கு கை நகப் பராமரிப்பு செய்யும் போது உங்களது விரலில் வெட்டுக் காயம் ஏற்பட்டு விட்டது. நீங்கள் உடனடியாக செய்ய வேண்டியது யாது?
    a) சேவையினை உடனடியாக நிறுத்திவிட்டு குருதி வடிவதற்கான நடைமுறையினை மேற்கொள்ளுதல்
    b) வெட்டுக் காயத்தினை ஒரு திசுவினால் சுற்றிவிட்டு சேவையினை தொடர்தல்
    c) காயத்திற்கு பன்டேஜ் இட்டு வாடிக்கையாளருக்கான சேவையினை வேறொரு நிபுணரினைப் பயன்படுத்தி முடித்தல்
    d) சேவையினை முடிவுக்கு கொண்டு வருதல் மற்றும் மருத்துவ உதவியினைப் பெறுதல்;

Wondershare PDFelement

10. மேற்றோல் ஆனது தோலின் ஐந்து படைகளை கொண்டது. ஸ்ரேற்றம் கோர்னியம், ஸ்ரேற்றம் லியூசிடம், ஸ்ரேற்றம் கிரனியூலோசம், ஸ்ரேற்றம் ஸ்பைனோசம் மற்றும் ஸ்ரேற்றம் ஜேர்மினேரிவம். இவற்றுள் மிகவும் கீழே காணப்படுவதும் மற்றும் இழையுருப்பிரிவு மூலம் கல வளர்ச்சி நடைபெறுவதுமான படை யாது?
    a) ஸ்ரேற்றம் கிரனியூலோசம் (Stratum Granulosum)
    b) ஸ்ரேற்றம் ஜேர்மினேரிவம் (Stratum Germinativum)
    c) ஸ்ரேற்றம் ஸ்பைனோசம் (Stratum Spinosum)
    d) ஸ்ரேற்றம் லியூசிடம் (Stratum Lucidum)

11. சிகிச்சை (treatment) மசாஜ் மற்றும் ரிலக்ஷிங் (relaxing) மசாஜ் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது?
    a) மசாஜ் செய்யும் காலப்பகுதி
    b) இரண்டும் சமனானவை
    c) பயன்படுத்தும் உற்பத்திப் பொருட்கள்
    d) பிரயோகிக்கப்படும் அழுத்தத்தின் அளவு

12. நகம் தனக்கு தேவையான போசணையை பெற்றுக் கொள்வது:
    a) தாயத்தில் (Matrix) இருந்து
    b) நெயில் குரூவ் (Nail groove) இலிருந்து
    c) சுயாதீனமுடிவிடத்தில் (Free edge) இருந்து
    d) எப்போநிச்சியம் (Eponychium) இலிருந்து

13. தலைமுடியிற்கான சுரப்பினை சுரக்கும் சுரப்பியானது
    a) சீபச்சுரப்பி (Sebaceous gland)
    b) சுடோறிபெரஸ் சுரப்பி (Sudoriferous gland)
    c) வியர்வைச்சுரப்பி (Sweat gland)
    d) அதிரீனல் சுரப்பி (Adrenal gland)

Wondershare PDFelement

14. ஒரு தனிநபரின் ஆரோக்கியம் சிறப்பாக பேணப்படக்கூடியது:
    a) நாளாந்த சுகாதார பழக்கவழக்கங்கள் மூலம்
    b) ஒழுங்கற்றும் சுத்தமற்றும் இருத்தல்
    c) எல்லா வகையான உணவுகளையும் உண்ணுதல்
    d) அசுத்தமான இடத்தில் வேலை செய்தல்

15. சுத்தமான துவாய்களை பேண வேண்டியது
    a) அழுக்கான துவாய்களுக்கு அருகில்;
    b) மூடிய கபினெட் ஒன்றினுள்
    c) திறந்த கபினெட் ஒன்றினுள்
    d) விறாக்கியினுள்

16. மெலனின் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றது?
    a) மெலனோசைற் (Melanocytes) என அழைக்கப்படும் கலங்களினால்
    b) டெஸ்குவாமேஷன் (desquamation) என்ற செயன்முறையின் போது
    c) தோலில் காணப்படும் வியர்வைச் சுரப்பிகள் மூலம்
    d) ஹிஸ்ரியோசைற்றிக் (Histiocytic) என அழைக்கப்படும் கலங்களின் மூலம்

Wondershare PDFelement

17. மெழுகிடலுக்கு முன்னர் தோலிற்கு ஏன் பவுடர் பூசப்படுகின்றது?
 a) தோலினைஅழுத்தமாக்குவதற்கு
 b) தோலிலுள்ள முடிகளை தோலில் இருந்து நிமிர்த்துவதற்கு
 c) வலியைக் குறைப்பதற்கு
 d) தோலினைக் குளிர்மையாக்குவதற்கு

18. எப்போநிச்சியத்தின் (eponychium) தொழிற்பாடு யாது?
 a) புதிய கலங்களை உற்பத்தி செய்தல்
 b) தாயத்தினை நுண்ணங்கித் தொற்றிலிருந்து பாதுகாத்தல்
 c) ஹங் நகங்கள் (hang nails) மற்றும் இன்குரோயிங் நகங்கள் (in growing nails) ஆகியவற்றினைப் பாதுகாப்பதற்கு
 d) நக தட்டுக்களை உரிய இடத்தில் பேணுவதற்கு

19. கண் ஒப்பனைக்குப் பொருத்தமற்றது பின்வருவனவற்றுள் எது?
 a) விழிவெண்படல அழற்ச்சி (Conjunctivitis)
 b) உலர் தோல் (Dry skin)
 c) மீலியா (Milia)
 d) எப்பிலிட்ஸ் (Ephelides)

20. இளஞ் சூடான மெழுகு தோலிற்கு எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும்?
 a) பின்புறமாக
 b) முடி வளரும் பக்கமாக
 c) முடி வளரும் திசைக்கு எதிர்த் திசையில்;
 d) 8 வடிவத்தில்

Wondershare PDFelement

21. மெழுகிடல் சிகிச்சையினை தவிர்க்கமுடியாத ஒரு பிரச்சினையானது?
 a) உலர்ந்ததோல்
 b) சிறு சிராய்ப்புகள்
 c) இம்பெற்றிகோ (Impetigo)
 d) சிறிய வெட்டுகள் அல்லது சிராய்ப்புகள்

22. சூடான மெழுகினை பிரயோகிப்பதற்கு பொருத்தமான முடி வகை யாது?
 a) கரடுமுரடான தலைமுடி
 b) நீண்ட தலைமுடி
 c) நுண்ணிய தலைமுடி
 d) ஐதான தலைமுடி

23. மெழுகினை அகற்றும் போது தோலினை இழுக்க வேண்டியது ஏன்?
 a) காயங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் மெழுகினை அகற்றுவதனை இலகுவாக்குவதற்கும்
 b) முடி வளர்வதனை குறைப்பதற்கு
 c) நிபுணத்துவர் போன்று தோற்றமளிப்பதற்கு
 d) நீங்கள் தோலினை இழுக்க வேண்டியதில்லை

Wondershare
PDFelement

24. சூடான மெழுகின் தடித்த படையினை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவமானது?
   a) அதன் மூலம் அதிக பணத்தினை அறவிடமுடியும்
   b) அது முடிகளை வினைத்திறனாக அகற்றுவதற்கு மெழுகிற்கு உதவுகின்றது
   c) செலவினத்தினைக் குறைப்பதற்கு
   d) சிகிச்சையினை விரைவுபடுத்துவதற்கு

25. கையின் கீழ்ப்புற மற்றும் பிகினி மெழுகிடலின் (bikini waxing) போது வாடிக்கையாளரின் ஆடைகளைப் பாதுகாக்க வேண்டியது ஏன் அவசியமாகும்?
   a) சிகிச்சையினை இலகுவாக்குவதற்கு
   b) சிகிச்சையினை விரைவாக்குவதற்கு
   c) மெழுகு வாடிக்கையாளரின் ஆடையின் மீது படுவதைத் தவிர்ப்பதற்கு
   d) சிகிச்சையின் பொருட்டு கூடுதல் கட்டணத்தினை அறவிடுவதற்கு

26. கையிற்கு கீழான மெழுகிடலிற்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகின்றது?
   a) 05 நிமிடங்கள்
   b) 10 நிமிடங்கள்
   c) 30 நிமிடங்கள்
   d) 15 நிமிடங்கள்

27. சூடான மெழுகுகள் (Warm waxes) பின்வருவனவற்றுள எவற்றினைக் கலப்பதன் மூலம் தயாரிக்கப்படுகின்றது?
   a) ரெசின் (Resin) மற்றும் எண்ணெய்
   b) குளுக்கோஸ் ஸ்ரப் (Glucose syrup) மற்றும் தேன்
   c) குளுக்கோஸ் ஸ்ரப் (Glucose syrup) மற்றும் நாக ஒட்சைட்டு
   d) தேன் மற்றும் உலர் இலைச்சாறு (witch hazel)

Wondershare
PDFelement

28. பின்வருவனவற்றுள் எது இன்குரோயிங் முடிக்குக் (ingrowing hairs) காரணமாகும்?
   a) அதிகளவுக்கு அதிகமான எக்ஸ்போலியேட் (exfoliate) செய்தல்
   b) எண்ணைத் தன்மையான தோல்
   c) சூடான மெழுகு
   d) மோசமான மெழுகிடல் தொழில்நுட்பம்

29. கட்புருவங்களின் தொழிற்பாடு யாது?
   a) இது வியர்வை கண்களினுள் விழுவதிலிருந்து பாதுகாக்கின்றது
   b) வாடிக்கையாளரின் தோற்றத்தினை மெருகூட்டுகின்றது
   c) கட்புருவ என்பினைப் பாதுகாப்பதுடன் அதற்கு மென்மையான போர்வையினை வழங்குகின்றது
   d) அது கண்களையும் கண் இமைகளையும் பாதுகாக்கின்றது

Wondershare PDFelement

30. விலஸ் (vellus) வகையான முடி என அழைக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   a) தலை முடி
   b) கட்புருவ முடி
   c) கன்ன முடி
   d) மீசை முடி

31. ஒரு சிறந்த அமரும் நிலையினை பேணுவதற்கு, உமது முழங்கால்கள் மற்றும்,
   a) கைகளை நெருக்கமாக வைத்திருத்தல்;
   b) தொடைகளை தளர்வாக வைத்திருத்தல்
   c) பாதங்களை நெருக்கமாக வைத்திருத்தல்
   d) கணுக்கால்களை குறுக்காக வைத்திருத்தல்

32. ஒரு வெற்றிகரமான அழகுக்கலை நிபுணர் ஒரு திறன் மிக்க
   a) கதை கூறுபவர்
   b) செவிமடுப்பவர்
   c) உடல்தகுதி நிபுணர்
   d) நாகரீகமான நிபுணர்

33. கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டிய மேற்பரப்பாவது:
   a) தோல்
   b) துளையற்ற மேற்பரப்பு
   c) நகத் தட்டுகள்
   d) மரம் மற்றும் பிளாஸ்டிக் மேற்பரப்பு

34. தொற்றுநீக்கல் (Disinfection) கிருமி நீக்கலிற்கு (sterilization) ஒரு படி கீழானது. ஏனெனில் தொற்றுநீக்கல் மூலம்
   a) நுண்ணங்கிகளை கொல்லப்படுவதில்லை
   b) பக்ரீறியாக்களின் வித்திகள் கொல்லப்படுவதில்லை
   c) மணத்தினை ஏற்படுத்துவதில்லை
   d) மேற்பரப்பானது சுத்தம் செய்யப்படுவதில்லை

35. ஒரு தோற் பரிசோதனையினை ஆரம்பிப்பதற்கு முன்னர், உமது வாடிக்கையாளர் மூலம் ____________ வினாக்கொத்தானது நிரப்பியிருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   a) சுகாதாரப் பரிசோதனை தொடர்பான
   b) ஒவ்வாமைப் பரிசோதனை பட்டியல்
   c) தனிப்பட்ட தரவுகள் தொடர்பான
   d) தோலின் நிலைமை தொடர்பான

36. முகத்திற்கான சிகிச்சை ஒன்றினை மேற்கொள்ளும் போது மறையான பக்கவிளைவினை ஏற்படுத்தக்கூடிய வாடிக்கையாளரின் நிலைமை அல்லது வாடிக்கையாளருக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சை முறையானது அழைக்கப்படுவது,
   a) ஒவ்வாமை
   b) தோற் பரிசோதனை
   c) முரண்பாட்டு நிலைமை (Contraindication)
   d) அசாதாரண நிலைமை (Abnormality)

Wondershare PDFelement

Wondershare PDFelement

37. உலர்ந்த மற்றும் உணர்ச்சி மிகுந்த தோல்களை சுத்தம் செய்தல் மற்றும் ஒப்பனையினை அகற்றுதல் ஆகியவற்றின் பொருட்டு வடிவமைக்கப்பட்ட நுரையினை தோற்றுவிக்காத திரவமாவது
   a) க்ளென்சிங் லோஷன் (Cleansing lotion)
   b) பேஷ் ரின்ஸ் (Face rinse)
   c) க்ளென்சிங் மில்க் (Cleansing milk)
   d) பேஷ்7வோஷ் (Face wash)

38. சுத்தப்படுத்திய பின்னர் தோலின் pH பெறுமதியினைக் குறைப்பதற்கும் மற்றும் மேலதிகமானவற்றினை சுத்தப்படுத்தி அகற்றுவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ள உற்பத்தியானது
   a) எக்ஸ்போலியன்ட் (Exfoliant)
   b) ரோனர் (Toner)
   c) என்சைம் பீல் (Enzyme peel)
   d) கோமேஜ் (Gommage)

39. எண்ணை அல்லது முகப்பரு உள்ள தோலின் பொருட்டு பயன்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள திரவ வகையானது
   a) டொனிக்ஸ் (Tonics)
   b) ப்ரஸ்னேர்ஸ் (Fresheners)
   c) அஸ்ட்ரிஜென்ட்ஸ் (Astringents)
   d) ரோனர் (Toners)

Wondershare PDFelement

40. தோலின் மேற்பரப்பில் எந்தக் கழிவுகளையும் எஞ்சவிடாமல் விரைவாக உறிஞ்சும் நீர் சார்ந்த இமல்ஷன் (Water-based emulsions) ___________ என அழைக்கப்படுகின்றது.
   a) நரிஷிங் க்ரீம் (Nourishing cream)
   b) ஸ்கின் ப்ரஸ்னேர்ஸ் (Skin freshener)
   c) மசாஜ் க்ரீம் (Massage cream)
   d) மொய்ஸ்ரரைசர் (Moisturize)

41. மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சைகளை தீர்மானிக்கின்ற ஒரு பேஷல் சிகிச்சையின் ஆரம்ப செயற்பாடாவது
   a) தோல் ஆலோசனை மற்றும் கட்டணத்தினைத் தீர்மானித்தல்
   b) தோற் பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை
   c) தோற் பகுப்பாய்வு மற்றும் தயாரிப்புகளின் தேர்வு
   d) தயாரிப்புகளின் தேர்வு மற்றும் கட்டணத்தினைத் தீர்மானித்தல்

Wondershare
PDFelement

42. அழகுக்கலை கைவினைஞரினால் வாடிக்கையாளரின் முகத்திற்கு பேஷல் சிகிச்சையினை மேற்கொள்ள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் உடல்நலப் பரிசோதனையானது பின்வருவனவற்றுள் எதனைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
   a) வாடிக்கையாளரின் வாழ்க்கை முறையினை
   b) தயாரிப்புக்களை தேர்வு செய்வதனை
   c) முரண்பாட்டு நிலைமைகளை (Contraindications)
   d) அழகுக்கலை வல்லுநரின் வாழ்க்கை முறையினை

43. சொரியாசிஸ் (Psoriasis) இன் அறிகுறியானது
   a) உயர்ந்த முடிச்சுகள்
   b) உடலில் இருந்து முடி உதிர்தல்
   c) வைரஸ் தொற்று
   d) செதில், சிவப்பு புண்கள்

44. க்ளே மாஸ்க் (clay mask) களின் நன்மை பயக்கும் செயற்பாடாவது?
   a) நிறத்தினை ஆழப்படுத்தும்
   b) சருமத்தினை மென்மையாக்கும்
   c) அசுத்தங்களை உறிஞ்சுகின்றது
   d) வெப்பநிலையினை அதிகரிக்கின்றது

45. தசை இழையங்களைத் தூண்டக்கூடியது
   a) மசாஜ் மூலம்
   b) ஐஸ் பக்கெட்டின் மூலம்
   c) ஒப்பனை அடிப்படை ஒன்றின் மூலம்
   d) அஸ்ட்ரின்ஜென்ட் மூலம்

Wondershare
PDFelement

46. மனித தோலின் பாதுகாப்பு வெளிப்புற அடுக்கான மேற்றோலானது உருவாக்கப்பட்டுள்ள நான்கு வகையான கலங்களாவன?
   a) கெரட்டினோசைட்டுகள், மெலனோசைட்டுகள், லாங்கர்ஹான்ஸ் மற்றும் மார்க்கல் கலங்கள்
   b) கொலாஜன், எலாஸ்ரின், பைப்ரோபிளாஸ்ட், மாஸ்ட் கலங்கள்
   c) லிம்போசைட்டுகள், அடிப்போசைட்டுகள், மாக்ரோபேஜ்கள் மற்றும் மைக்ரோபேஜ்கள்
   d) கோர்பஸல்ஸ், ஹெமிடெஸ்மோசோம்கள், ஸ்குவாமவுஸ் கலங்கள் மற்றும் எபித்திலியல் கலங்கள்

47. சீபத்தின் செயல்பாடாவது என்ன?
   a) சருமத்தை உலர்த்துதல்
   b) சருமத்தை குளிர்வித்தல்
   c) தோலினை சுத்தப்படுத்துதல்
   d) தோலில் உராய்வினை நீக்குவதல்

48. வியர்வையின் செயல்பாடாவது?
   a) சருமத்தை உலர்த்துதல்
   b) சருமத்தை குளிர்வித்தல்
   c) தோலினை சுத்தப்படுத்துதல்
   d) தோலில் உராய்வினை நீக்குவதல்

Wondershare
PDFelement

49. கொலாஜன் மற்றும் எலாஸ்டின் இழைகளை நீங்கள் எங்கே காணலாம்?

a) எப்பிடேமிர்ஸ் (Epidermis) மற்றும் ரெட்டிகுலர் (Reticular)

b) ரெட்டிகுலர் (Reticular) மற்றும் பப்பில்லரி (Papillary)

c) பப்பில்லரி (Papillary) மற்றும் சப்கியூட்டேனியஸ் (Subcutaneous)

d) சப்கியூட்டேனியஸ் (Subcutaneous) மற்றும் எப்பிடேமிர்ஸ் (Epidermis)

50. சருமத்தினை மேம்படுத்துவதற்கு குருதியானது

a) கழிவுகளை வடித்து அகற்றுகின்றது

b) ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஒட்சிசன் என்பவற்றினை வழங்குகின்றது

c) கொலாஜன் மற்றும் எலாஸ்டின் என்பவற்றினை போக்குவரத்து செய்கின்றது

d) சுரக்கும் செயற்பாட்டினை அதிகரிக்கின்றது

(01 x 50 = 50 புள்ளிகள்)

Wondershare
PDFelement

அனைத்து உரிமைகளும் பெற்றுது

Wondershare PDFelement

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு - ஏப்ரல் 2022

## அழகுக்கலை நிபுணர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

- இவ் வினாத்தாளில் முதலாவது (01) வினா உட்பட நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்கவும். (முதலாவது (01) வினாவுக்கு விடையளித்தல் கட்டாயமானதாகும் என்பதுடன் விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்'ணிக்கை நான்கு (04) ஆகும்)
- வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள இடங்களில் விடையளிக்கவும்.
- இவ் வினாதாள் 06 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

## பகுதி 2

1.

i). அழகுக்கலை நிலையமொன்றில் உயர்பட்ச ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை பேணுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்குக. (03 புள்ளிகள்)

Wondershare PDFelement

ii). முக சிகிச்சையின் பொருட்டு வாடிக்கையாளர் ஒருவரை தயார்படுத்த வேண்டிய படிமுறைகளை விளக்குக (02 புள்ளிகள்)

iii). அழகுக் கலை நிலையமொன்றில் உபகரணங்களை எவ்வாறு வெற்றிகரமாக கிருமிநீக்கம் செய்ய வேண்டும் என்பதை விவரிக்கவும். (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iv). பேஷல் சிகிச்சையின் போது கரும்புள்ளிகள் (blackheads) மற்றும் வெள்ளைப் புள்ளிகளை (whiteheads) ஆகியவற்றினை எவ்வாறு சரியாகவும் பாதுகாப்பாகவும் அகற்ற வேண்டும் என்பதனை விளக்குக. (03 புள்ளிகள்)

v). ஐந்து (05) தோல் நோய்களைப் பெயரிட்டு அவற்றினை விவரிக்கவும். (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

vi). கட்புருவத்தை எவ்வாறு வெற்றிகரமாகவும் மற்றும் ஆக்க பூர்வமாகவும் வடிவமைக்கலாம் என்பதனை வரைந்து விவரிக்கவும். (03 புள்ளிகள்)

vii). அழகுக் கலை நிலையத்தில் பொருட்களை எவ்வாறு சரியாக சேமித்து வைக்கலாம் என்பதனை விளக்குக. (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

2.

i). பேஷல் சிகிச்சைக்காக வாடிக்கையாளர் ஒருவர் வருகைதரும் பட்சத்தில் அழகுக்கலை தொடர்பான ஆலோசனையினை வழங்கும் முகமாக அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்களை விளக்குக.
(2.5 புள்ளிகள்)

ii). ஹொட் வக்ஸ் (Hot wax) தொடர்பான ஐந்து (05) முரண்பாட்டு நிலைமைகளை எழுதவும்.
(2.5 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). சிறிய கண்களைக் கொண்ட வாடிக்கையாளர் ஒருவருக்கு ஒரு சிறந்த தோற்றத்தினைக் கொடுப்பதற்காக, கண் ஒப்பனையினை மேற்கொள்ள வேண்டிய முறையினை படிமுறையாக விளக்கவும்.
(05 புள்ளிகள்)

Wondershare
PDFelement

3.

i). சீபச் சுரப்பியின் (sebaceous gland) செயல்பாட்டினை விவரிக்கவும் (03 புள்ளிகள்)

ii). தோலின் குறுக்குவெட்டு முகத்தினை வரைந்து பகுதிகளைப் பெயரிடவும் (04 புள்ளிகள்)

iii). மெனிக்கியூர் ஒன்றினை மேற்கொள்வதற்காக வருகைதந்துள்ள வாடிக்கையாளர் ஒருவருக்கு நக நோய் ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதனை எவ்வாறு கண்டறிய முடியும்? அதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை? (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

4.

i). நகத்தின் குறுக்குவெட்டுமுகத்தினை வரைந்து பெயரிடவும் (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

ii). மாலை விருந்து ஒன்றில் கலந்துகொள்வதற்குத் தயாராகவுள்ள வாடிக்கையாளர் ஒருவருக்கு மேக்கப் இனை பிரயோகிப்பதற்கான வர்ணங்களை தேர்வு செய்யும் முறையினை விளக்குக. (03 புள்ளிகள்)

iii). செயற்கை நகங்களை பொருத்துதல் மற்றும் அவற்றினை அலங்கரிக்கும் முறையினை விபரிக்குக. (04 புள்ளிகள்)

5.

i). அமிலம் மற்றும் காரம் என pH பெறுமதியினை வேறுபிரிக்கக்கூடிய முறையினை விளக்குக. (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

ii). ஒரு பொருளின் தரத்தினை எவ்வாறு அடையாளங்காணமுடியும் என்பதனை விவரிக்குக. (03 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). பாதிப்படைந்த தோல் ஒன்றினை எவ்வாறு அடையாளம் காணலாம்? அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை? (04 புள்ளிகள்)

6.

i). சரியான பெடிக்கியூர் சிகிச்சையின் படிமுறைகளை எழுதுக. (03 புள்ளிகள்)

ii). வாடிக்கையாளர் ஆலோசனை தாளின் (consultation sheet) முக்கியத்துவத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). சந்தையில் ஓர் சிறந்த நிலையினை எவ்வாறு பேணமுடியும் என்பதனை விளக்குக. (03 புள்ளிகள்)